# கவிதை

கவிதைகள்

# POETRY

## Poems

by

R
894.811,
17
RAM

கண்டி எம். ராமச்சந்ரன்

— Kandy M. Ramachandran —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RESERVE

Kavitai

16 /-

# கவிதை -

## கவிதைகள்

# POETRY -

## Poems

வெளியீடு
Publication
07 - 02 - 1987

UNIVERSITY OF PERADENIYA ★ LIBRARY ★
15-6-1990

by

கண்டி எம். ராமச்சந்திரன்
Kandy M. Ramachandran

Ramacclantran, Kaddy M.

No. 8, Cemetery Road.
Mahaiyawa
Kandy
Sri Lanka.

411516

411516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 1987

● மக்கள் கலை
படைக்கும்
படைப்பாளர்
எவ ரெவரோ
அவர்களுக்கு
மாத்திரமே! ஆம்!
இந்நூல் படையல்.

● நிச்சயமாய்ப்
படைப்பாளர் அல்லாத
எழுத்தாளர்
ஆய்வாளர்க்
கல்லவே! ஆம்!

★ ★

– கண்டி எம். ராமச்சந்ரன்

- பதிப்புரிமை ஆசிரியருக்கே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. புதுக் கவிதை

- அசை யில்லை
  சீரில்லை
  தளையில்லை
  அளவான
  அடியில்லை
  தொடுக்கின்ற
  தொடை வகைகள்
  ஐந்திலே
  எதுவு மில்லை!

- வல்லின
  மெல்லின
  இடையின
  ஓசை
  ஒழுங்கில்லை!

- உவமான
  உவமேய
  உருவகங்கள்
  ஒன்று மில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இது வென்ன?
வெங்காயப்
புதுக் கவிதை!

● ரம்பண்டா
ரன்மெனிக்கே,
காதர்
கதீஜா பீபீ,
ராமன்
ராமாயி,
எல்லாம்
எழுது துகள்!

● பாரதி தாசர்களும்,
அவன் தாசன்
தாசர்களும்;
கண்ணதாசன்
தண்ணிதாசன்
தாசர்களும்;
எழுதுகின்றார்
புதுக் கவிதை!
புதுமை யுண்டாம்!
பல்லிளிப்பு!
புகழ்ச்சி யுண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நாமும்
அதைச் செய்தால்,
நாய்க்
குரைப்பு!
கேட்கு திங்கே?

● அளவு கோல்
இடுப்படியில்
தொங்குகின்ற—
புத்திமான்கள்!

★ ★ ★ ★
★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. புதுக் கவிதை!

- காலத்தின் தேவைக்குக்
கவி சமைத்துக்
கருத்தைச் சொல்லக்
காவியா யானதுவே
புதுக் கவிதை!

- கவிஞர்களே! இதனுலே
காரியங்கள்
கெட்டா போகும்?
மரபை வைத்து
நீங்கள் மட்டும்
மாரடித்துக் கொள்ளுங்களே!
மறுப்பு இல்லை.

- காடுண்டே போய்விடுங்கள்
கவியாகித் திரிந்திடலாம்!
கதிரவனும் சுடர்விடுவான்
குளிர்ச்சிக்காக!
காட்டினிலும் நிலவொளிக்கும்
குளிர்காயத்தான்!

★ ★
★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. யாப்பு!

- யாப் பென்றும்
கவிதை யென்றும்
மர பென்றும்
மா ரடிக்கும்
சிலரைக்
கண்டால்
ஆப் பிழுத்த
குரங்கு கதை
அடி மனத்தி
லிருந்து மேல்
எழுந்து நிற்கும்!

- யாப் பறியாக்
கடல் போன்ற
மக்களுக்கு,
யார் வருவார்
கதை சொல்லி
விளக்குதற்கு?

- யாம் செய்வோம்
அதை யவர்க்கு!
ஆம்! செல்லும்
ஆப் பிழுக்க!

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. இழிசினர் இலக்கியம்?

- பஞ்சாங்கம்
  பார்த்து,
  பா உரை
  எழுதுகின்ற,
  பண்டிதர்கள்
  வித்துவான்கள்
  பட்டப்
  படிப்பாளி
  என்பவர்கள்,
  போடுகின்ற
  பாடங்கள்
  பழையதுவே?
  மாற்றமில்லை!

- கம்பன்
  கவிதையிலே,
  கால் வழியாற்
  தேன் வடியும்,
  கதைகளிலே
  ராமர்களும்,
  காவியத்தில்,
  சீதைகளும்,
  கலந்து வருவதல்லால்
  கருத்தில் ஓர் உப்பில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர்களுக்கு
இனிமேலே
இடமுண்டு
''மியூசியத்தில்'';
இங்கோ
இல்லை!

- இவர்களே
இழிசினர்கள்,
எம தாக்கம்
பழு தென்பார்!
தம தாக்கம்
என் றென்றும்
தந்தாரில்லை?

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. செருப்பு!

- எதுகையும்
மோனை
கொண்டு,
எதையுமே
எழுதினுற்றுன்
இதமாக
இருக்கு மென்றுல்,
அதை
நாங்கள்
செய்ய
மாட்டோம்!

- எம்
எண்ணம்
சிந்தனைகள்
எடுத்தியம்ப,
இவைகளை
நாம்,
செருப்பாக
மாத்திரமே
எடுப்போம்!
சொன்னேம்!

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. எது கவிதை?

- எதுகை
மோனை
வருவதற்கு,
எது யெதையோ
எழுதுகின்ற
கழுதைகளே
கவிஞர் களாம்;

- இக்
கழுதைகளின்
எழுத்துகளே
கவிதை
எனும்,
கழுதைகளும்
சிலது
காண்போம்!

- கழுதைகட்கு
மற்றவைகள்
கவிதைகளே
அல்லவாமே?

- மக்கள் குரல்
ஒலிக்க,
மாத்திரமே
எம் கவிதை,
மாக்களுக்கு
இது விளங்க,
மாட்டாதே
என் செய்வோம்!

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. நிலவே!

● பாமரரில்
ஒருவனுய்
இருந்தும்,
தான்
பண்டிதற்குப்
பாவியற்றும்
புலமையையே
போற்றும்
வேளே;

● பாமரர்க்குப்
புரியாத
நடை பயின்று,
இயற்றும்
பாக்கள்,
காட்டினிலே
ஒளிக்கின்ற
நில வென்ருல்
பிழையு முண்டோ?

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. மாற்றம்!

- மாம்
பழம்
சிவப்பு
என்று,
ஒருவன்
சொன்ஞன்!

- இல்லை!
அது
பச்சை
என்று,
மற்
ருெருவன்
சொன்ஞன்!

- இரண்டு
மில்லை!
மஞ்சள்
என,
இன்
ஞெருவன்
சொன்ஞன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நிறங்களிலே
முரண்பாடு
தெரிந்திட்டாலும்,
முதிர்ந்திட்ட
பக்கு வத்தால்
தெரிந்த
தோற்றம்!

● முழுதுமே
உண்மை யன்ரே?
காலத்தால்
கனிகின்ற
நிலையின்
தேற்றம்!

● கவிதைகளும்
இம்
மாற்றம்
காணுவிட்டால்,
அது
ஏமாற்றம்!

★ ★ ★
★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. வேண்டும் புதுக் கவிதை!

- மரபு
குலைந்திடவே
கூடாது
என்பதற்காய்,
மல்
யுத்தம்
செய்து
சொற்கள்
தேர்ந்
தெடுத்து;

- நாலாயிரம்
பேரில்
நாலு
பேர்க்கும்
நாலு சொல்
விளங்காது
இயற்றுகின்ற
கவிதையோ,
எமக்கு
வேண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல் லோர்க்கும்
பயன்
படவே,
புரிகின்ற
இலகு மொழி
நடை பயின்று,
இயற்றுவீர்
புதுக் கவிதை
புதுமை
காண!

- காதலையும்
கூதலையும்
சோதரியர்
கால்
கையை,
இடை
தொடையை,
இது போன்றும்
அது போன்றும்,
இருக்கு தென்று
எழுதுவதாற்
பயனு முண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● புராணப்
புளுகர்களாம்,
பொய்
வாய்ப்
புலவர்களால்
நிரப்பியவை
நிறைய வுண்டே!
புதுமை யுண்டா?

● எம்
மக்கள்-
சோதரர்
சோதரியர்-
நூற்றுக்கு
எண்பது பேர்,
வறுமை
பசி
நோயால்
வாடுகின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீடு
  வசதி யின்றி
  வீதி யோரம்
  தூங்கு கின்ருர்!

- வேலே
  வாய்ப் பின்றி
  வீதியிலே
  அலேகின்ருர்!

- இவர்கள்
  துயர்
  கலேய,
  இவர்கள்
  நிலே
  யுயர,
  உமது
  புதுக் கவிதை,
  உதவ
  வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இவர்கள்
இலகுவாய்ப்
புரிவதற்கும்,
இதமாக
அதுவும்
வேண்டும்!

● கவிதை
வேண்டும்!
புதுக்
கவிதை
வேண்டும்!
புதுப்
புதிர்க்
கவிதை வேண்டும்!

* * * * * * *
* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. அதுவும்! இதுவும்!

- செக்
கிழுக்கும்
மாடு
போற்
கவிதைகள் தான்,
மரபு
என்றால்;

- அப்படித் தான்
எழுதுபவர்
கவிஞர்
என்றால்;

- அக்
கவிதைகளும்
கவிஞர்களும்
ஏட்டுச்
சுரைக்காயாய்
இருந்திடட்டும்
எமக்கோ
வேண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● எம்
மக்கள்
எளிதாக
விளங்கிக்
கொள்ள,
இலகு
நடை
எது யெதுவோ
அவை
பயின்று,
இயற்றுவோம்
புதுக்
கவிதை
புனிதமாக!
புதுமை காண!
எமது
நோக்கில்!

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. எதுவேண்டும்? மனமே!

● மரபுக்
கவிதையே
தாய்ப்
பாலென்ருல்,
புட்டிப்
பாலென்பதுவே
புதுக்
கவிதை;

● இன்றுள்ள
இங்குள்ள
குழந்தைகளில்
எண்பது
பேர்
புட்டிப்
பால்
அருந்துகின்ருர்,
இது
இன்றேல்
இதமாக
இறந்து
போவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இருபதுகள்
உயிர்
வாழ,
எண்பது
பேர்
உயிர்
விடுதல்
மரபு என்றால்,
அதுதான்
நன்றோ?

- அவைகளுடன்
இவர்களுமே
வாழ்தல்
தீதா?

- எது
வேண்டும்?
என் பார்கள்
இதய
முள்ளோர்?

★ ★ ★
★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. குறும்பா?

● குறும்
 பாவும்,
வெறும்
 பாவும்,
தேடித்
தேடி,
 கோடிட்டு
வைத்திடுவீர்,
புதையுண்டு
கல்லான
 பொருளே
 போல!
எமக்கு
வேண்டாம்!

● இரும்படிக்கு
மிடத்துக்குக்
குறும்
பா
போனல்
துரும்பே
யாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எறும்பாக
உழைக்கின்ற
எம்மவர்க்கு,
எப்
பாவும்
தப் பாது
தூசே
யாகும்!

- குறும்பு
மட்டும்
எம்
மிடத்தில்
இனி மேல்
வேண்டாம்!
திரும்பாதீர்
எம்
பக்கம்
குறும்பாவோடு;
திரும்ப மாட்டீர்!

* * * *

411516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பைத்தியமே! வைத்தியம் பார்!

● கோவணங்
கட்டிக்
கொண்டு,
கொடி
கட்டி
 உந்தன்
பாட்டன்,
 வாழ்ந்தனன்
அன்று
என்று;

● கோவணம்
 நீயும்
கட்டி,
கொடி
பிடித்து
 இன்று
 சென்றால்,
''பொலிஸார்''
பிடித்துச்
 சென்று
போடுவார்
கூட்டினுள்ளே!

41516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● மற்ற
நாள்
ஆகு முன்னே,
மன
நோயாளி
யென்று,
அனுப்புவார்
சிகிச்சைக்காக
''அங்கொடை
போய் வா!''
என்று.

● யாப் பென்றும்
மரபு என்றும்,
கூச்சலே
போடுவோர்க்குப்,
பாதிப்போ?
அந் நோய்
தொக்கு!

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. பிராயச்சித்தம்

- கவிதை யெனும்
  நங்கை பாவம்!
  காலங் கடந்தாகில்
  ஞானம் பெற்று,
  கண்ணீர்
  வடிக்கின்ருள்
  மடைதிறந்து!

- காவியத் தலைவனுக,
  அரசனை
  மட்டும்
  காட்டி
  அறிவிலி
  ஆனே னென்று!

- காவியத் தலைவியாக
  கவைக் குதவாக்
  கனிகையை யான்,
  காட்டிப்
  பாழ்
  பட்டே னென்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● எவ் வுலகும்
உய் விக்கும்,
கை
படைத்த
பாட்டாளி,
தனே மறந்த
பாவங்கள்
கரைய வென்ருே?
கண்ணீர்
வடிக் கின்ருள்!

● இல்லே யில்லே!
பாவக் கறை
படிந்த,
தன் கையைத்
தானே
கழுவி விட்டு,
பாட்டாளி தன்
புனிதப்,
பாதம் கழுவுகின்ருள்
கண்ணீராலே!
காலம்
பழிக்கு மென்ற
பயத்தாற் ருேஞே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பாட்டாளி தன்
புனிதப்,
பாதம்
கழுவுகின்ருள்
கண்ணீராலே!

● யாப் பென்றும்
மர பென்றும்
வேலி கட்டி,
தாங்களே
கவிஞ ரெனத்
தங்களுக்கே
தாலி கட்டித்,
தடுத்தோரின்
முகங்களைத்
தன்
காலாற்
தட்டி,
குதித்துப்
பாய்ந்தாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பாய்ந் தோடி
வந்து
விட்டாள்!
கரம் நீட்டி
வந்து
விட்டாள்!
பாட்டாளி யின்
பக்கம்
பலமே யாக!
புனிதமாஞள்.

★ ★ ★ ★
★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. புதுக் கவிதையே! வாழ்க!

● பாரதிக்குப்
பின்
பாரதி
  தாச
னென்றும்,
அவனுக்கு
இன்னு
மொரு
  தாசன்
இல்லை!

● அதனுலே-
இனி மேலே
எங்களுக்குக்
  கவிதைகளே
இல்லை
என்ற,
ஏக்க நிலை
தேக்க நிலை
முறியாது
தடைப்பட்டே
நின்றி ருக்கும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடையினிலே
புதுக் கவிதை
புகுந்து,
புரட்சிப்
புதுமைகளைச்,
  செய்துமே,
தொடராது
இருந்
திருந் தால்!

- புகுந்தாய்!
தொடர்ந்தாய்!
புரட்சி செய்தாய்!
புதுமை
பல செய்தாய்!
புதுக் கவிஞர்
பலர் தந்தாய்!
புதுக் கவிதையே!
நீ!
நீடு வாழி!

★ ★ ★ ★

UNIVERSITY OF PERADENIYA ★ LIBRARY ★
15-6-1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. கவிதா!

● கவிதா மணியே!
கண்ணே!
பொன்னே!

● உனது நட்பால்
இரண்டு தொல்லைகள்,
எனக்கிங் குண்டே!
எடுத்துரைக் கின்றேன்.

● கவிஞர் பலரை
மேற்கோள் காட்டி,
கவித்துவம் என்னில்
இல்லை என்றே,
கெடுத்திட முயலும்
கடையரின் தொல்லை!

● உந்தன் நட்பு
எனக் குண்டென்றும்,
உண்மையும் உறுதியும்
உடனுண் டென்றும்,
தொடர்ந்து எழுதெனத்
தூண்டும் நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின்னவர் அன்பர்.
முன்னவர் அல்லர்!
பின்னவர் தொல்லையைப்
புனிதமென் றேற்றேன்!
என்னை நீ ஏற்பாய்
இனி வழி யுண்டோ?

- காசுக்காக எதுவுஞ் செய்யும்
கடையன் அல்லேன்!
கேடுகள் செய்யேன்!

- நலிவுறு மக்கள்
நிலைகளை நிமிர்த்த,
நித்தம் நித்தம்
நான் குரல் கொடுக்க,
நீட்டினேன் என் கரம்
உன் கரம் பற்றியே!

★ ★ ★ ★
★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. பாவும், பதவுரையும்!

- பாக்கள்
  எழுதிவிட்டுப்,
பதவுரைகள்
பின் எழுதி,
  இதை
  அதையும்
தொடர்பு செய்து
  இன்னது தான்
பொருளென்று
புரிந்திடாது,
  தடுமாற
வைப்பதுவே
  தரமான
  மரபு வழிக்
கவிதை யென்றால்,
  எமக்
  கந்தக்
கழுதை
  வேண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பாமரர்கள்
புரிகின்ற,
இலகு நடை
எளிய நடை
எது யெதுவோ
அவை பயின்று,
இயற்றுவோம்
புதுக்
கவிதை!

● உரை கல்லும்
எவர் தயவும்,
புகழுரையும்
இகழுரையும்,
பொருட்டாக
மதிக்க மாட்டோம்!

● எம் கருத்து
சிந்தனைகள்,
நேராக
நேர்மையுடன்,
எம் மக்கள்
முன்னே வைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அசிங்கம்
அலங்கோலம்,
அவைகட்குத் தான்
வேண்டும்
சிங்காரம்!
சோடனை!
அலங்கரிப்பு!
அத்தனையும்.
அல்லவைக்கு,
அவை
எதற்கு?

- பொய்யர்
புளுகருக்குப்,
பூச்சு
மெழுகளெல்லாம்
தேவையே
மறுப்பு
வேண்டாம்!

★ ★ ★ ★
★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

## 18. உரைகல் உனக்கு வேண்டாம்!

● கவிதை யென்றால்
தங்களுக்கே
தனியுடைமை,
என்று
எண்ணி;

● சிலதுகளோ,
தங்களுக்குத்
தாங்களே,
பட்டயங்கள்
தீட்டிக்
கொண்டு;

● தலையில்
ஒன்று மி(ல்)லே,
அதனால்,
முண்டாசும்
அதன் மேலே
பெரிதாகக்
கட்டிக்
கொண்டு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●

● சரி
பிழைகள்
சொல்லுதுகள்!
எதற்கோ?
ஏனோ?

● உன்
எண்ணம்
சிந்தனைகள்
வெளிப் படுத்த,
உன்
மொழியை,
உன்
நடையை,
நீ
கைக்
கொண்டு,
உன்
கவிதை
நீ
இயற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உரை கல்லா?
உனக் கெதற்கு?
படைப் பாளி
நீ யன்றோ!
உழைப்பாளி
உன்
ஆசான்!
இவை
இரண்டும்
உனக் குண்டே!
இவைக்கு மேல்
வே றெதுவும்,
உனக்
கெதற்கு?

- படை
படையாய்ப்
படைத்து விடு,
புதிர்
புதிதாய்ப்
புதுக்
கவிதை!
புரிவதற்கே!

- மக்கள்
கவிதை யென்றால்
இதுவே
யன்றோ!

★ ★ ★ ★
★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கவிதை காலத் தேவை!

● அரசர்கள்
ஆண்ட நாளில்,
அவரடி
  தொழுது
போற்றி,
  வயிறு
  வளர்த்த,
சோற்றுப்
பொறுக்கிகளும்
  கவி படைத்தார்!
அரசர்கள்
ஆள!
பரிசுகள்
  தேட!

● மான்ய முறை
  சமுதாய
  அமைப்பைக் காத்து,
தான்யம்
  பெற்று,
வயிறு
வளர்த்த
வீணர்களே
  கவி படைத்தார்!
தாம்
  வாழத்தான்!

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இங்
கின்று,
அரசரில்லை
அடியாரில்லை,
ஆண்டான்
அடிமை யில்லை,
ஆண்டவனும்
உள்ளானா?
  சந்தேகம்!
தெளிவு இல்லை!

- மாறுக,
முதலாளி
மடுவாக,
தொழிலாளி
மலையாக,
  இரண்டு வர்க்கம்
  இங்கு
  உண்டே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● முதலாளி
வர்க்கத்தைச்
சார்ந்து
நின்று,
உழையாது
உயிர் வாழும்
உழுத்தர் தானும்!
மரபுக்
கவிதைகளைத்
தூக்கிப்
பிடிக்கின்றார்!
சுய
நலந்தான்!

● நாம்
சார்ந்த
வர்க்கமோ,
உழைக்கும்
வர்க்கம்!
புதியதுவாம்,
புனித
வர்க்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புனித
  வர்க்கக்
  குரல் கொடுக்கப்
  புறப்பட்டு
  வந்ததுவே
  புதுக்
  கவிதை!
  காலத்
  தேவை!

- தேவை யால்
  கவி
  பிறப்பே!
  வலம்
  மாறி
  இல்லை
  எங்கும்?

★ ★ ★ ★
★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. சிறப்பே புதுக் கவிதை!

- மகா ராய
ராய ஸ்த்ரீ!
முறையே
மாறி,
''மை டிய(ர்)'' *(my dear)*
  என்று ஆச்சு!

- மாடுகள்
இடத்தி லின்று,
''ட்ரெக்டர்கள்'' *(tractor)*
  என்று ஆச்சு!

- கோவணம்
கொண்டை போச்சு!
ஷோ(ர்)ட் *(short)*
''குரொப்பும்'' *(crop)*
''சூட்டு'' மாச்சு! *(suit)*

- கடவுளும்
காலப் போக்கில்
  ''மொட்'' *(mod)*
ஆவார்
என்றும் பேச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ''கிலெசிக்கல்'' *(classical)*
தோசை யாச்சு!
''பொப்,'' ''டிஸ்கோ'' *(Pop, Disco)*
இசை, நடனம்
எங்கு மாச்சு!

● கைத்
தொழிற்
புரட்சி காண
கனரக
யந்திரங்கள்,
என்றே யாச்சு!

● நேரமோ
போதா தென்று
ஓடியே
அலைய லாச்சு!

● கவிதைகளை
மட்டும்
ஏனோ?
கல்லாக்கச்
சிலர் துடிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்லேயும்
குடைந்து
கொண்டு,
  வெடித்துமே
  வெளிக்
கிளம்பும்
  புரட்சியே
  புதுக் கவிதை!
சிறப்பே
  யன்றோ?

* * * * *
* * * *

MICROFILMED
Negative 1
Reel No. 1/062
Date: 02.10.91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. புதுக்கவிதை, புகழ் பரப்பும்!

● இளைஞர்காள்!
யுவதிகாள்!
உங்களாற் றான்,
புதுக் கவிதை
புகழ் பரப்பும்!
பிழை பட்டாலோ!
புண்
பட்டும்
போம்!

● பாமரரை
நாயகமாய்!
ஏழைகளை
எடு கோளாய்!
நீதியையே
'பேஞு' வாய்!
நேர்மையையே
'மை' யாய்!
எடுப்பீர்!
புனைந்திடுவீர்
புதுக் கவிதை!
'பார்' முழுதும்
பரப்பி வைப்பீர்!

★ ★

41516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RESERVE

## - பின்னுரை -

- 'விடிவை நோக்கி'
என்கின்ற
என் கவிதை
முந் நூலை,
பின் வந்து
முன் நின்று
முழுமையாய்
ஆக்குதற்கு
அத்தனையும்
செய்த, செல்வா!
பூச்சி செல்வராஜ்.
உனக்கு என்
உளமார்ந்த
நன்றி சொன்னேன்!

- இந்நூலை வெளியிடவும்
முன் வந்து
முழுதும் செய்தாய்!
இதற் கென்
அன்பு!

* *

கண்டி எம். ராமச்சந்திரன்
8 செமெட்ரி ரோட்
மஹய்யாவ
கண்டி
சிரி லங்கா

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/062
Date: 02.10.91

411516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
15-6-1990
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

411516

அச்சிட்டோர்:

பிராவி அச்சகம்
274 டீ. எஸ். எஸ். வீதி,
கண்டி-ஸ்ரீ லங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org